# ஹிந்திப்போர்.

# திருச்சியில் துவஜாரோகணம்.

## சேனா வீரர்களின் துடி துடிப்பு.

### ஸ்டாலின் ஜெகதீசனுக்கு உருக்கமான வேண்டுகோள்.

(நமது நிருபர்)

திருச்சி; மே. 28

**தமிழ்நாட்டின் ஹிருதய பீடமாயிருக்கும் திருச்சி நகரில் ஹிந்திப் போருக்கான கொடிமரம் இன்று நாட்டபட்டு விட்டது. இதற்காக தமிழ்நாட்டின் நானா பக்கங்களிலிருந்தும் பல சேனைத் தலைவர்களும் போர் வீரர்களும் நேற்று இரவு முதல் இன்று காலை 8-மணி வரை ஒவ்வோரு ரயிலிலிருந்தும் இறங்கி வந்த வண்ணமாயிருந்தனர்.**

விஜயம் செய்திருந்த வீரர்களில் பலர் எதற்கும் தயாராயிருக்கக் கூடிய 'துள்ளு காலைகள்' என்று சொன்னாலும் தகும். ஹிந்தியை நுழைப்பதில், அதறகுப் பர்த்தியாக நீங்கள் ஒவ்வோருவரும் அவரவர் உடம்பிலிருந்து ஒருபடி ரத்தம் எடுத்துத் தர வேண்டுமேன்று கேட்டிருந்தால், அதை முகஞ் சுழிக்காமல் செய்து கோடுக்கத் தக்க வீர உள்ளங்கோண்டவர்ளே வந்திருந்த அத்தனை பேரும்.

கூட்ட நடவடிக்கைகளின் போது உண்ணாவிரத வீரர் ஸ்டாலின் ஜெகதீசனைப் பற்றி பிரஸ்தாபிக்கப் பட்ட சமயம் கூட்டத்திலிருந்த சகலர் முகமும் வேற்றுருப்பட்டுத் தெரிந்தனவென்றே சொல்ல வேண்டும்.

*சத்தியாக்கிரகம் அதில் வெற்றி கிடைக்காவிடில் சட்ட மறுப்புப் போர் தொடங்க வேண்டியது தான் என்று தலைவர் போர் முறை தீர்மானம் செய்ததும் சகலரும் ஆனந்தப் பெருவாரிதியில் மூழ்கினர் என்பது மிகையாகாது.*

**மோத்தத்தில் இன்று செய்யப்பட்ட மந்திராலோசனைத் தீர்மானம் ஒவ்வொன்றும் உசுருள்ளவை என்றால் அது மிக மிகப் பொருந்தும்.**

இன்று காலை 9-மணிக்கு திருச்சி தென்னூர் பழனிச்சாமி பிள்ளை அவர்களின் 'ரிவர் ஸைட்' பங்களாவில் அண்ணாமலை யுனிவர்சிட்டி தமிழ்ப் போராசிரியர் தோழர் எஸ். சோமசுந்திர பாரதி எம். ஏ. பி. எல்., அவர்களின் தலைமையின் கீழ் சென்னை மாகாணத் தமிழர் சங்கத்தின் முதல் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூடியது.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள்:-சென்னை சி. டி. நாகம், என். ரெங்கையா, எஸ் டி. ஷண்முகம், கே. எம். பாலசுப்பிரமணியம்; பட்டிவீரன்பட்டி டபிள்யு. பி. ஏ. சௌந்திரபாண்டியன்; மதுரை எ. எஸ். அருணாசலம், ப. வ. விநாயகமூர்த்தி, என். சுருளி; விருதுநகர் எஸ். உத்தண்டன், ஏ. பழனிச்சாமி கே. பி. மகாலிங்கம்; தஞ்சாவூர் ராவ் சாகிப் டி. வி. உமாமகேசுவரம் பிள்ளை; ஈரோடு ஈ. வெ. ரா; சிதம்பரம் எஸ். எஸ். பாரதியார்; நாகை டி. எஸ். மணி; உடுமலைப்பேட்டை எம். எஸ். சனகராஜன், பி. வி. ராமசாமி, சித்தயங்கோட்டை வி. எஸ். எஸ் மணி, வேலூர் சுவாமி ஷண்முகானந்தம்; சோளவந்தன் டி, ஆவுடையப்பா; கௌந்தராஜநல்லூர் கே. நல்லதம்பி; பூவாளூர் அ. பொன்னம்பலம்; மாயவரம் மூவலூர் ராமாமிர்தத்தம்மாள், எஸ். வி. லிங்கம்; பாபநாசம் எஸ். வாசுதேவன்; பசுபதிகோவில் எ. கணபதி, ஜி சுந்தரமூர்த்தி; லால்குடி எல். என். ஆறுமுகம், நல்லதம்பி, மதலை முத்து; மணக்கால் எம். கே. லெக்ஷ்மணன், எம். கே. சோமசுந்திரம், எம். ஆர். ரெத்தினசாமி, எம். சின்னையன், எம். ஏ. தஸ்தஹீர்; பொன்மலை ராயப்பன், மலபார் எம். ஏ. ஆண்ட்ரூஸ், சேலம் குகை ஜெகதீஸ்; ராசிபுரம் ஜனாப் முகையதீன் சாகிப்; காட்டுப்புத்தூர் எஸ். கே. பி, முத்து ராஜா, வி. எம். பொன்னுசாமி, எம். தேக்க முத்து ராஜா, தங்கராஜ்; திருச்சி எம். நடராஜன், கே. ஏ. பி விஸ்வநாதம், டி. பி வேதாச்சலம், ஆர். பெருமாள் நாயுடு, எஸ். பிரான்ஸிஸ், டி. வி- பி. பொன்னம்பலம், டி. வி. துரை சுடலைமுத்து, பீர் முகமது, நாராயணன், பாபு சாயபு, ராமய்யா, லெக்ஷ்மணய்யா, அபிமன்னன், டி. எம். முத்து, பிச்சை பண்டிதர், டி. திரவியம், செ. மு. அ பாலசுப்பிரமணியம், பி- சிவஞானம், வரகனேரி அ. சிவபிச்சை, எம். ராமசாமி, டி. எம், பெருமாள்; உறையூர் எம். ஆர். திருமலைசாமி, ச. ம. சி. பரமசிவம், வி. பாலசிவம், ஆர். ரெங்கையா, டி, எஸ். மாணிக்கம், எஸ். கால்ரயுதப்; பாண்டமங்கலம் எம். ஓங்காரசாமி; புத்தூர் டி. வி. ராமசாமி; திருவானைக்காவல் சாம்ப சதாசிவம்; துறையூர் சைமன் ராமசாமி; வி. துரைசாமி; மணப்பாறை டி. என். பத்மனாப செட்டியார் கரூர் கே. செங்கோடன், சி. ராமசாமி, வி. கருப்பையா; கொடைக்கனல் பி. வி. கோவிந்தசாமி நாயுடு; ராசிபுரம் டி. எஸ். மொய்தீன் கான் சாயபு பகதூர்; திண்டுக்கல் எஸ். ரெங்கசாமி நாயுடு முதலியவர்கள் உள்பட மற்றும் சுமார் 300 பேர்கள் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள்.

### ஆலோசனைக் கடிதங்கள்.

கூட்டம் தொடங்கியதும் தமிழர் மகாநாட்டு வரவு செலவு கணக்குகள் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப் பெற்றது. நிர்வாகக் கமிட்டியார் செய்யும் தீர்மானங்களை ஆதரித்தும் ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டியார் மேற்கொள்ள வேண்டிய சில ஆலோசனைகளை வகுத்தும் தோழர்கள் ஈழத்துச் சிவானந்த அடிகள், ஸர். ஏ. டி. பன்னீர் செல்வம், எஸ். முத்தையா முதலியார், அ. மாணிக்கம், ஷண்முக முதலியார், அண்ணல் தங்கோ, குமாரசாமி பாவலர், கருப்பண்ணன், பொன்னுசாமி, லக்ஷ்மீரதன் பாரதி எம். ஏ., பி. எல், ஆள்வார்ராமானுஜ நாயகி, ஸ்டாலின் ஜெகதீஷ் முதலியோர்கள் எழுதிய கடிதங்கள் வாசிக்கப் பட்டு பதிவு செய்யப்பெற்றன.

### கமிட்டிகள்

ஏற்கனவேயுள்ள நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களுடன் அதிகமாக 14 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் சென்னை மாகாண தமிழர் சங்க நிர்வாக அங்கத்தினர்கள் 52 பேருடன் இன்னும் 29 பேர் சேர்க்கப்பட்டார்கள் (இவர்களின் பெயர் விவரம் பின்னர் வெளிவரும்.)

### தீர்மானங்கள்

கீழ்க்கண்ட தீர்மானங்கள் காலை 10-மணி முதல் 1மணி வரையிலும் மாலை 2-30 மணி முதல் 4-30 மணி வரையிலும் பல தோழர்களால் கொண்டு வரப்பட்டு பலத்த திருத்தங்களுக்குப் பின் ஏகமனதாய் ஆமோதித்து நிறைவேற்றப் பட்டன.

1. சென்னை மாகாண முழுவதும் ஹிந்தியை கட்டாய பாடமாக்க முயற்சிக்கும் அரசியலார் கொடுஞ்செயலை வீரத்துடன் எதிர்த்து உயிர் கொடுக்கவும் துணிந்து இன்று வரை போராடி வருகின்ற தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் முதலிய தமிழ் மக்கள் அனைவரையும் இக்கமிட்டி பெரிதும் பாராட்டுகிறது. தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்கள் ஹிந்தியை ஒழிக்கவும் அதுசம்பந்தமாய் தமிழரை விழிப்படையச் செய்யவும் பட்டினி கிடந்து வருவதை உணர்ந்து இக்கமிட்டி ஹிந்தியை ஒழிப்பதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு நடத்துவதாக அவருக்கு உறுதி கூறி, அவருடைய உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ளும்படி இக் கமிட்டி அவரை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறது.

### தனிக்கமிட்டி

2. ஹிந்தியை கட்டாயப் பாடமாக வைக்கப் பெறும் பள்ளிக்கூடங்கள் உள்ள ஊர்களுக்குச் சென்று பிரசாரஞ் செய்யவும், அந்தந்த ஊர்களில் ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டியை நியமிக்கவும் எல்லா ஊர்களிலும் பண வசூல் செய்யவும் (செலவு செய்யவும்) இன்னும் அவசியமானவைகளைச் செய்யவும் அடியிற் கண்டவர்களடங்கிய ஓர் கமிட்டி நியமிக்கப்பெற்றது. தோழர்கள் எஸ். எஸ். பாரதியார், தா- வே. உமாமகேஸ்வரம் பிள்ளை, டபுள்யூ. பி. எ. சௌந்திரபாண்டியன், ஈ. வெ. ராமசாமி கி. ஆ. பெ. விஸ்வநாதம், கே. எம். பால சுப்ரமண்யம்.

### வேலைத் திட்டங்கள்.

3 சென்னை மாகாண ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டியானது அடியிற் கண்ட வேலைத் திட்டங்களை உடனே நிறைவேற்றி ஆங்காங்கு கிளைக் கமிட்டிகளை நிறுவி அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென அந்தந்த ஊர்களிலுள்ள கமிட்டி அங்கத்தினர்களையும், ஜில்லா அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்கிறது.

அ ஒருவழிப்படை (ஜாதா) திரட்டி பல ஊர்களிலும் சென்று தமிழ் மக்களிடையே உணர்ச்சியை வளர்த்தல்.

ஆ. ஹிந்தி கட்டாய பாடப் பள்ளிக் கூடங்களில் முதல் மூன்று பாரங்களுக்கு மணாக்கர்களை அனுப்பாமல் வேறு பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்படி பெற்றோர்களையும், புரப்பவர்களையும் கேட்டுக் கொள்ளுதல்.

இ. ஹிந்தி கட்டாய பாடத்தை தங்கள் பள்ளியில் வைத்து நடத்தவேண்டாமென பள்ளிக்கூட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுதல்.

ஈ. மாணவர்களை ஹிந்திப் பாடப் பள்ளிக்கூடங்களி சேர்ந்து படிக்காமல் மறியல் செய்து தடைப்படுத்தல்.

உ. ஹிந்தி ஆசிரியர்களை எல்லா வகையிலும் பகிஷ்காரஞ் செய்ய சமாதான முறையில் தக்க ஏற்பாடுகளைச் செய்தல்.

ஊ. குறிப்பிடுகின்ற ஓர் நாளை ஹிந்தி ஒழிப்பு நாளாக தமிழ் மாகாணம் முழுவதும் கொண்டாடிவர ஏற்பாடு செய்தல்.

எ. வாய்த்த போதெல்லாம் மந்திரிகளுக்குக் கறுப்புக்கொடி பிடித்தல் முதலிய செயல்களால் வெறுப்பைக்காட்டுதல்.

ஏ. மேற்கண்ட வேலைத் திட்டங்கள் விரும்பிய வெற்றியைத் தாராதவரையில் சட்டமறுப்புச் செய்தாவது ஹிந்தியை கட்டாய பாடமாக்கும் செயலை ஒழித்தல்.

4 ஹிந்தி ஒழிப்பிற்காக தற்கால நிலையில் பட்டினி கிடக்கும் முறையை மேர்கொள்ள வேண்டியதில்லையென்று கமிட்டி கருதுகிறது. தங்கள் சொந்த விருப்பப்படி தனிப்பட்ட முறையில் உண்ணாவிரதம் இருப்பதின்மூலம் ஹிந்தியை ஒழிக்கக் கருதினால் கமிட்டி அவர்களைத் தடை செய்யவும் விரும்டவில்லை.

### சென்னைக்குச் சர்வாதிகாரி.

5. சென்னையில் ஹிந்தி எதிர்ப்புப் போரை நடத்தவும், நடத்தும் முறைகளை வகுக்கவும், அப்போதைக்கப்போது ஆவன செய்யவும் தோழர் ஸி. டி. நாயகம் அவர்களை இக்கமிட்டி சர்வாதிகாரியாக நியமித்திருக்கிறது.

### ஹிந்தியே உதவாது

6. வார்தாக் கல்வித் திட்டமானது மக்களுடைய கல்விப் பயிற்சிக்குப் பெரும் கேடு பயக்குமென இக்கமிட்டி கருதுவதுடன் அத்திட்டப்படி ஆசிரியர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்குக் தகருடையுர், ஹிந்தி பயிற்சியும் இன்றியாமையாத தகுதியென மந்திரிகள் ஏற்பாடு செய்திருப்பதை இக்கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது. இதனால் ஹிந்தி பயிற்சியை நமது மாகாணத்தில் பதவிகளுக்கு இன்றியாமையாத தகுதியாக்குவது மந்திரிகளின் நோக்கமென நன்கு புலப்படுவதால் ஹிந்தியை விருப்பப் பாடமாக வருவதையும் ஒழிக்க வேண்டுமென இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

### மகாநாட்டுப் பணம்.

7. மகாநாட்டு மீதி கையிருப்புத்தொகை ரூ 450-லிருந்து ரூ. 350 மட்டும் ஹிந்தி எதிர்ப்பு வகைக்குக் கொடுக்கிறதென்று கமிட்டித் தீர்மானிக்கிறது.

8. ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டிக்கு அமைச்சசராகவும், பொருளாளராகவும் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களை கமிட்டி நியமிக்கிறது. ஆகவே ஆங்காங்குள்ள அன்பர்கள் நிதியை பெருந்திரளாக வசூலிருத்து அவர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென இக்கமிட்டி பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறது.

9. நிதியை அறுவர் கமிட்டியினர் முடிவு செய்கிறபடி அப்போதைக்கப்போது பொருளாளர் செலவிட வேண்டுமென கமிட்டி தீர்மானிக்கிறது.

காரியதரிசி தோழர் விசுவநாதம் வந்தனோபசாரம்கூற கூட்டம் இனிது முடிந்தது.

---

## நான் தயார்.

தஞ்சை, மே 29.

நான் 28-6-38 ல் திருச்சி ஹிந்தி ஒழிப்பு மகாநாட்டில் நடந்த தீர்மானங்களின்படி நடக்கத் தயாராயிருக்கிறேன்.

குமாரசாமிப்பிள்ளை,

என் விலாசம்:—

ராவ் சாஹிப் ஐ. குமாரசாமி பிள்ளை,

கருத்தட்டாங்குடி, தஞ்சாவூர்.